உ

சிவமயம்

# அருள்மிகு சம்புநாதேஸ்வரம் (சிவாலயம்)



# சிவ தத்துவ விளக்கம்

சோழர்புரம் வட-கிழக்கு, (சுழிபுரம்)

யாழ் மாவட்டம், இலங்கை

உ

ஆலய புனருத்தாரண திருப்பணி வேலைகளுக்கு
பணம் அன்பளிப்புச் செய்யும் அடியவர்கள்
பின்வரும் வங்கிக் கணக்கிற்கு
வைப்புச்செய்து, எமக்கும்
அறியத்தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

"Arulmiku Sampunatheswaram"
A/C No. S/A 1080314
OR
C/A 52186
People's Bank
Chankanai.

— பரிபாலனசபை

உ

சிவமயம்

# உள்ளடக்கம்


1. சிவாலய வரலாறு

2. சிவதத்துவ விளக்கம்

3. கட்டிட உத்தேசத் திட்டத்தொகை

4. சிவாலய புதிய அமைப்பு படம்

5. திரு. க. கார்த்திகேசுவை யோகிஆக்கிய புராணபடன உரையாசிரியராக்கிய "சம்புநாதேஸ்வரர்"

6. சங்கானை மக்கள் வங்கியில்
   சேமிப்புக் கணக்கு
   நடைமுறைக்கு கணக்கு




# சிவாலய வரலாறு

மேற்படி ஆலயம், 1500 ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையின் வடகோடியில் அமைந்திருந்தது. இலங்கைச் சரித்திர ஆய்வின்படிக்கு, கி.பி 113 –135ல் இலங்கையில் ஆட்சிசெய்த கஸபாகு மன்னன், இந்தியாவில் அன்று ஆட்சி செய்த, பேரரசன் சேரன் செங்குட்டுவன் அழைப்பின் பெயரில், கடல்பயணம் மேற்கொண்ட துறைமுகம் சம்பில்துறையாகும். கஸபாகு மன்னர் எடுத்துவந்த கண்ணகி சிலை ஒன்று சுழிபுரம் திசைமழையில் தாபனம் செய்யப்பெற்றது.

மூன்றாம் நூற்றாண்டில், இளவரசி சங்கமித்திரை தன் பரிவாரங்களுடன், வெள்ளரசுக் கிளைகளோடு வந்து போனதுறை முகமும், சரித்திரத்தில் இன்று குறிப்பிடப்பெற்ற (சம்புகோளம்) சம்பில்துறையாகும்.

அன்றைய சம்பில்துறைமுகப் பட்டணம், காலப்போக்கில் இயற்கையின் சீற்றத்தாலும், கடலரிப்பினாலும் மறைந்து போக, கடற்கரையில் அமைந்திருந்த சம்புகேதீஸ்வரர் "சிவலிங்க சொரூபம்" இடம்மாறியது.

அன்று இங்கு செல்வந்தராக வாழ்ந்து வந்த சைவச் செட்டியாரால், சொரூபம் எடுத்து வரப்பெற்று கரையிலிருந்து அரைகட்டை தூரத்துக்கு இப்பால் வயல்கரையில், சாத்தாவோலையில் ஸ்தாபனம் ஆனது. (இன்றும் இது கர்ணபரம்பரைக் கதையாக நின்று நிலவுகின்றது)

இந்தக் கோவிலுடன் திசைமழை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயமும் இத்தனிக்குடும்பச் சொத்தாகப் பரம்பரையாக ஆட்சி செய்யப் பெற்று வந்தன.

இன்றிருக்கும் பரம்பரை உரிமைக் குடும்பத்தினர், தமது இயலாமை காரணமாக 11.06.1999 இல் வழிபடுவோர் மகா சபையைக் கூட்டிப், பொதுவுடமையாக்கி, முழுப் பொறுப்புக்களையும் ஓர் பரிபாலன சபையிடம் உறுதி முடித்துக் கொடுத்துள்ளனர்.

பரிபாலன சபையினர் முதலில் கண்ணகி அம்மன் ஆலயத்தை ஏழுலட்சம் ரூபாவுக்கு மேல் நன்கொடை பெற்றுத் திருத்தி அமைத்து 15.03.2000 அன்று மண்டலாபிஷேகமும் நிறைவேற்றினர்.

அருள்மிகு சம்புநாதேஸ்வரம், (சிவாலயம்) இலங்கையில் நடைபெறும் யுத்தம் காரணமாக, 1992ம் ஆண்டில் பலத்த எறிகணைத்தாக்கங்களினால் பெரும்பகுதி சிதைவடைந்தும், மிகுதி அதிர்ந்துபோன நிலையிலும் இருக்கின்றது. அக்காலத்தில் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் கிராம மக்களிடம் நன்கொடை சேர்த்துத் திருத்தம் செய்தும் வீணாகிப்போனது.

**இன்றைய நிலையில், கோவில் புதிதாகக் கட்டவேண்டிய காரணம்:**

விஞ்ஞானம் வளர்ச்சி பெறும் வேகத்துக்கு ஈடுகொடுக்கக் கூடிய விதத்தில், கோவில்களை அமைத்தாக வேண்டும்

இச்சிவாலயம் சைவசித்தாந்த அடிப்படையில் அமைப்ப தற்கான வரைபடம், திட்டச் செலவுத்தொகை தயாரிக்கப் பெற்றுள்ளது.

இத்திருத்தலம் வருங்காலச் சந்ததியினரின் மெஞ்ஞான வளர்ச்சி ஓங்க "**கையிலயங்கிரி**" போலக் காட்சி தரவேண்டும்

அக்காட்சியால், மனித மன எண்ணங்கள் ஈர்க்கப்பெற்று மக்களின் அன்பு, பாச உணர்வு, பக்தி நிலை, அற ஒழுக்கம், உயர் பண்பாடு தானாகவே கைகூட வேண்டும்.

02.12.2000 அன்று, கூட்டிய மகாசபையில். மக்கள் படும் இன்னல்களை இல்லாதொழித்து மீட்சி பெறுவதற்கு, பரிபூரண சமாதானம் பெற்று வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறை அருள் பாலிக்க வேண்டி பிரார்த்தனை செய்தோம்.

சிவாலயத்தைக் கட்டி நிறைவு செய்வதற்கான முழுப்பண உதவியையும் அரசிடமே பெற்று நிறைவேற்ற வேண்டும் என்பது மகா சபையினரின் ஒருமனதான தீர்மானம், எனவே அரச உயர் அதிகாரிகள் மனமுவந்து உதவச் சிவனருள் பாலிக்க வேண்டுகின்றோம்.

***வணக்கம்***

"ஓம் நமசிவாய"

*பேரவை சார்பில் பரிபாலன சபையினர்*

| | | |
|---|---|---|
| | | ***கி. பூபாலசிங்கம்*** |
| ***க. நல்லையா*** | ***கு. வி. கந்தசாமி*** | ***செ. கணேஸ்வரன்*** |
| தலைவர் | பொருளாளர் | இணைச்செயலாளர் |

உ

சிவமயம்

# சிவதத்துவ விளக்கம்

சைவ சமய மக்களாகிய நாம் வழிபாடு செய்யும் “சிவன்” திருவருள் தத்துவங்கள் பற்றிச் சிறிதளவாவது சிந்திப்பது சிறப்பாகும்.

சைவ சித்தாந்தம் விரித்துரைப்பது, பதி - பசு - பாசம் என்கின்ற மூன்றினுள் அடக்கும். முழுமுதல் தெய்வமாகிய சிவன் “முக்கண்ணன்” என்பதும் ஆழ்ந்து சிந்திக்கற்பாலது.

“சிவன்” அண்டசராசரங்களையும், அவற்றுள் கோடானுகோடி சீவசெந்துக்களையும், ஐந்தொழில் மூலம் அர்ச்சிக்கிறார்.

படைத்தல் - காத்தல் - அழித்தல் - அருளல் - மீட்டல். “இறைவன்” எங்கும் நிறைந்தவர் - எல்லாம் அறிபவர் - என்றும் உள்ளவர் எனவே, இறைவன் தனக்கெனச் சொரூபம் அற்றவர்

அண்டகோளங்கள் அனைத்தும் ஐம்பெரும் பூதங்களில் அடக்கம்.

அவையாவன:

நிலம் - நீர் - நெருப்பு - காற்று - ஆகாயம் பல்கோடி பிறவிகளெடுக்கும் சீவராசிகள், ஐம்பெரும் பூதங்களின் ஆக்கங்களேயாம் :

உதாரணம்: எம் உடம்பு ஐம்பூதங்களினால் ஆனதேயாகும் நிலம் - நீர் - நெருப்பு - காற்று - ஆகாயம். எம்மை ஆழ்பவை, ஐம்பொறிகள்: மெய் - வாய் - கண் - மூக்கு - செவி.

இறைவன் படைப்பில் ஓர் அங்கம் இப்பூவுலகம். இதனை 5 கண்டங்களாகவும், 5 சமுத்திரங்களாகவும் வகுக்கப் பெற்றிருப்பதும், வியப்பல்ல.

ஆசியா - ஆபிரிக்கா - ஐரோப்பா - அவுஸ்திரேலியா - அமெரிக்கா

இந்து சமுத்திரம் - அத்திலாந்திச் சமுத்திரம் - வடசமுத்திரம் - தென்சமுத்திரம் - பசுபிக் சமுத்திரம்

எல்லாம் வல்ல சிவனுக்கு "பஞ்சமுகன்" என்று பெயர் எனவே போலும், கண்டங்களும், சமுத்திரங்களும் இறைவனின் திருமுகங்கள். இவற்றுளெல்லாம் இறைவன் இரண்டறக் கலந்துள்ளார்.

எங்கும் நிறைந்த இறைவன், எல்லாச் சீவராசிகளின் அமைப்புள்ளும் நடுநாயகமாக இருந்து அனுக்கிரகம் செய்கின்றார்.

வட்ட வடிவில் இப்பூவுலகைப் படைத்த இறைவன், பூமியின் நடுமத்தியில், இமயமலை உச்சியில் "கைலயங்கிரியில்", சக்தியோடிணைந்து எழுந்தருளியிருக் கிறார். இந்த உண்மையை எத்தனையோ ஞானிகள், தப சிரேஷ்டர்கள் தத்தம் தியானபலத்தால் நிருபித்துள்ளனர்.

இந்த மாயை உலகில் கோடானுகோடி சீவராசிகளின் ஐந்தொழில்களும் (பிறப்பு - இறப்பு - காப்பு - அருளல் - மீட்டல்) ஆண் பெண் சேர்க்கையின் அடியொட்டியே ஆக்கம் பெறுவது அனுபவ உண்மை.

இதனை உறுதிசெய்வது, "மாதொருபாகன்" ஆகத் திருக்கைலாயத்தில், நடுநாயகமாக எழுந்தருளி இருந்து, கிருபை செய்கின்றார் என்பதாம்.

இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவர். இம் மண் உலம் 5 வகைப்படுத்தப் பெற்றுள்ளது. குறிஞ்சி - முல்லை - மருதம் - நெய்தல் - பாலை.

இறைவன் சொரூபமற்றவர் என்கிறோம். எனவே தான், ஆதி திராவிடமக்கள் - சிவலிங்க விக்கிரகத்தை, சிவசக்தி சொரூபமாக வடிவமைத்து, வணக்கத்துக்குரிய விக்கிரகமாக வைத்து, வழிபாடு செய்தனர்.

உதாரணம் : இந்திய உபகண்டத்தின் வடகோடியில் பெரு நதிக் கரைகளில், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்கள் ஆதிதிராவிடர் ஆகும். இவர்கள் வழிபாடு செய்த சொரூபம் "சிவலிங்கம்" இதனைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களும், சரித்திர ஆராய்ச்சிப் பேரறிஞர்களும் நிருபித்துள்ளனர். சரித்திரப் புத்தகத்தில் எழுதியும் நிலை நிறுத்தியுள்ளனர்.

மொகன்சதாரோ, கறப்பா என்ற மண்ணுள் மாண்டு மறைந்திருந்த பெருநகரங்களைத்தோண்டி ஆராய்ந்தனர். சிவலிங்க சொரூபங்கள், புனிதத்தலங்களாக அமைந்திருந்த இடங்களின் மத்தியில், கண்டெடுக்கப் பெற்றன. அன்று வாழ்ந்த திராவிடப் பழங்குடி மக்களின் வணக்கத்துக்கானவை சிவலிங்க சொரூபங்களே என்பது நிருபணமாகியுள்ளது.

இப் பூவுலகில் வாழ்கின்ற மக்கள் அனைவரதும் சமயக் கொள்கைகளையும் ஐந்து பிரிவாகக் கூறலாம். அவை : இந்து சமயம் - கிறிஸ்தவம் - இஸ்லாம் - பௌத்தம் - இயற்கை (இயற்கை: பொதுவுடமை வாதிகளின் நம்பிக்கை)

மானிடப் பிறவி எடுத்த நாம் ஆத்துமா ஈடேற்றத் துக்கு, இறைவழிபாடு செய்வதற்குத் திருத்தலங்கள் அவசியம்.

உலகை வட்டவடிவமாகப் படைத்த இறைவனுக் கமையும் கோவில் வட்டவடிவில் 5 கோணங்களாக அமைவது சாலப் பொருந்தும்.

இறை சொரூபம் "சிவலிங்கம்"! "மாதொருபாகன்" நட்டுக்கு நடுவில் தாபனம் செய்வதும் சாலப்பொருந்தும். இதனை அடியொட்டியே கட்டிட வரைபடம் அமைக்கப் பெற்றிருக்கின்றது.

## சிவக்கிரியைகள் பற்றிய சிறு ஆய்வு

இறைவன் அருளிச் செய்த மந்திரம் ஐந்தெழுத்தில் சிவாயநம ! நமசிவாய.

கோவில்களில் வழிபாடு செய்வோர் கேட்டு விளங்கப்பாடுவது "பஞ்சபுராணம்"

தேவாரம் - திருவாசகம் - திருவிசைப்பா - திருப்பல்லாண்டு - பெரியபுராணம்.

வழிபாட்டுக்கு கூடுவோர் கைகூப்பித் தொட்டு வணங்குவதும், பஞ்சாலாத்தி (கற்பூர ஒளியேயாம்)

அபிஷேகத் திரவியங்களை (5) பஞ்சதிரவியங்களென்போம். பஞ்சாமிர்தம் சாத்தியே அபிஷேகிப்பது வழக்கம். பஞ்ச கிருத்தியங்கள், பஞ்ச புராணங்கள், ஐம்பெரும் காப்பியங்கள் இன்னோரன்ன பிறபலவும் 5 எண் அடிப்படையில் இறைவனால் அருளச்செய்யப் பெற்றிருக்கின்றது. இதனை அடியொட்டி ஐந்து கோண வட்டவடிவில் அனைத்தும் அமைவது சிறப்பாகும்.

மணிவாசகப்பெருமான் சிவபுராணத்தில் "நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த" என்பதும் உற்று நோக்கற்பாலது.

மனிதப்பிறவி உய்திபெறுவதற்கு விலக்கப்பட வேண்டியவை : கொலை - களவு - கள் - காமம் - குரு நிந்தை என்ற 5 இழி செயல்களேயாம்.

மானிடம் உய்யும் பொருட்டு வாழ்வில் கையாள வேண்டிய கொள்கைகள் : அன்பு - பண்பு - பாசம் - அறம் - அருளுடமை என்பவையாகும்.

முற்றும்

"ஓம் நமசிவாய"

## சம்புநாதேஸ்வரர் மூலத்தாபனத்துக்கும் உள்வீதிக் கொட்டகைக்கும் ஆகும். செலவுடன், பின்வரும் விசேட கட்டிட அலுவல்களுக்கான செலவுகள் விபரமும் தனித்தனி தரப்பெறுகின்றது.

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1. | பண்டிகைக் கட்டிடம் | 250000.00 |
| 2. | பிள்ளையார் + முருகன் | 400000.00 |
| 3. | நவக்கிரக மண்டபம் | 250000.00 |
| 4. | பலி பீடம் | 30000.00 |
| 5. | வைரவர் கோவில் | 175000.00 |
| 6. | மடைப்பள்ளி | 125000.00 |
| 7. | வசந்த மண்டபம் | 400000.00 |
| 8. | வாசல் கோபுரதாள்கள் பண்டிகை | 250000.00 |
| 9. | முன் கதவுகள் | 100000.00 |
| 10. | காண்டாமணிக் கோபுரம் | 300000.00 |
| 11. | பசனை, குருபூசை - தியான மண்டபம் | 380000.00 |
| 12. | மின் இணைப்பு அலுவல்கள் | 100000.00 |
| | | 2760000.00 |

இந்த சிவாலயம் 1992ல் எறிகணைத் தாக்கங்களினால் சிதைவடைந்திருப்பதை நன்கு பார்வையிட்ட, கட்டிடப் பொறியியலாளர் உயர்திரு. சு. சண்முக ஆனந்த நடேசர் அவர்களாகும். அவர் அறிக்கையில் தரப்பெற்ற விபரப்படிக்கு, புதிதாகக்கட்டத் தேவையான தொகை ரூபா 5520000/= (திகதி 21-02-2001)

இவற்றுள் மேலே தரப்பெற்றுள்ளவற்றைத் தனித்தனிக் குடும்பங்கள் பொறுப்பேற்று நிறைவேற்றித்தந்துதவும் படிக்கு பணிவன்போடு விண்ணப்பிக்கிறோம். இவற்றுக்கான மொத்தத், தொகை ரூபா 2760000/= உதாரம் : கண்ணகி அம்பாளிக்கு தனிக்குடும்பங்களே (கண்டாமணி + கோபுரம்) (மடைப்பள்ளி + களஞ்சிய அறை) அமைத்துத்தந்துள்ளனர். கணக்கறிக்கையில் காண்க.

| க. நல்லையா | கு. வி. கந்தசாமி | கி. பூபாலசிங்கம் |
|---|---|---|
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |

உ

# காந்திகேசுவை யோகி ஆக்கிய சம்புநாதர்

எம் இலங்கைத் திருநாடு கடலினால் சூழப்பெற்ற ஒரு தீபகற்பம். இத்தீவின் எட்டுத் திசையிலும் எம்பெருமானுக்கு (சிவனுக்கு) பழம்பெரும் ஆலயங்கள் எழுந்தருளி இருப்பதைக் காணலாம்.

**அவையாவன :-**

1. தீவின் வடக்கே வாய்ப்பகுதியில் சம்புநாதேஸ்வரம் சோழபுரம் (சுழிபுரம்)
2. நெஞ்சுப் பகுதியில் திருக்கேதீஸ்வரம் (மாதோட்டம்)
3. தொப்புள் பகுதியில் முனீஸ்வரம் (சிலாபம்)
4. மூலாதாரத்தில் பொன்னம்பலேஸ்வரம் (கொழும்பு)
5. திருப்பாதங்களில் சந்திரேஸ்வரம் (காலி)
6. பின் நாரிப் பகுதியில் தான்தோன்றீஸ்வரம் (மட்டக்களப்பு)
7. முதுகுப் பகுதியில் கோணேஸ்வரம் (திருமலை)
8. மூளைப் பகுதியில் நகுலேஸ்வரம் (கீரிமலை)

இவற்றிலெல்லாம் மிகப் பழமையும் புதுமையும் வாய்ந்த தலம் "**சம்புநாதேஸ்வரம்**" ஆகும்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சம்பில்துறை ஓர் துறைமுக பட்டணமாக விளங்கியது. இந்த சமுத்திரக்கரையில் எழுந்தருளியிருந்ததே "**சம்புநாதர் சிவாலயம்**" அன்று இந்த சம்பில்துறை, பாய்மரக் கப்பல்களை வரவேற்றது. சீனா போன்ற அன்னிய நாட்டவர் இத்தீவகற்பம் வந்து வாணிபம் செய்தனர். என்பது சரித்திரச் சான்றாகும்.

இலங்கைச் சரித்திரப்புத்தகத்தில் இன்றும் எழுதப்பெற்றிருக்கும் "சம்புகோளம்" எனப்படும் துறைமுகம் சம்பில்துறை என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. காலப் போக்கில் கடல்கொந்தளிப்பாலும், அரிப்பினாலும் துறைமுகப் பட்டணமும், சம்புநாதேஸ்வரமும் சமுத்திரத்தால் விழுங்கப்பட்ட போது, அக்காலத்தில் செல்வச் சீமான்களாக இங்கு வாழ்ந்து வந்த சோழவம்ச சைவச்செட்டியார் குடும்பம், கோவில் சிவலிங்க ஆதிமூல விக்கிரகத்தை மீட்டு வந்து, கடல்கரைக்கு இப்பால் வயல்கரையில் ஸ்தாபனம் செய்தனர்..

பரம்பரையாக, தனிக் குடும்பச் சொத்தாக இந்த அலயம் இருந்து வந்ததால் பிரபல்யம் பெறவில்லை.

இருந்தபோதிலும், மகிமை பெற்ற தலமாக விளங்குவதற்கு காரணம் மிக வியப்புக்குரியது.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதி, சம்புநாதேஸ்வரத்துக்கு அருகாமையில் ஒரு சைவச்செட்டியார் குடும்பம் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தது. குடும்ப சீவியத்துக்கு மரவள்ளித் தோட்டம், வெற்றிலை வியாபாரம். குடும்பத்தில் மூன்று பெண்கள் பிறந்தனர். கடைசியில் ௨௨.03.1908ல் ஓர் ஆண்மகவு பிறந்தபோதிருந்தே நோய்வாய்ப்பட்ட நிலையில் குழந்தை காணப்பட்டது. பெற்றோர் சிறுவனை பாடசாலைக்கு, அனுப்பினார். அவனுக்கு கும்மல், பிரட்டுநோய் வந்து படிக்கமுடியாத நிலை ஆசிரியரின் நச்சரிப்பு எனவே மூன்றாம் வகுப்பில் படிப்பைவிட்டு வெளியேற நேர்ந்தது.

சில்லாலை என்னும் கிராமத்தில் ஒரு மரவேலைத் தொழிலாளி ஞானவைரவர் ஆலயமொன்றுக்கு பூசை செய்து வந்தார். அவருக்கு கலையாட்டம் வருவது வழக்கம்.

பெற்றோர் இச்சிறுவனைக் கொண்டு சென்று பூசாரியிடம் கடவுள் வாக்கினை வேண்டி நின்றனர். பூசாரிக்கு உருவந்து கூறியவை "இந்தச் சிறுவனுக்கு வந்தநோய் மாற மருந்து கிடையாது, கடவுள்தான் கருணை காட்ட வேண்டும்".

பெற்றோர் இச்சிறுவனை சுழிபுரம் பறாளாய் சித்திவிநாயகர் கோவில் + முருகன் கோவில்களுக்கு கூட்டிச்சென்று வழிபடலாயினர். அக்காலத்தில் கோயில்களின், ஆதீனகர்த்தாக் களாகவும், ஆதிகார பூசகர்களாகவும், விளங்கிய சைவர் + அந்தணர்கள் இந்த நோய்வாய்ப்பட்ட சிறுவனை வெறுப்போடு கவனித்து வந்தனர். காரணம் கும்மல் பிரட்டால் வாந்தி எடுக்கும் நிலைமை. சிறுவன் தங்கும் இடம்மாற்ற நேர்ந்தது. அதுதான் "சம்புநாதேஸ்வரம்" தனிக்குடும்பச் சொத்தாதலினால், பிரபல்யமற்ற நிலையில் இருந்தது. இந்த சிவாலயத்தில் ஒரு சிறுமடம், அதில் தங்கியிருக்கவும், பூசாரி சொன்னபடி பிராணாயாமம் செய்யவும் வாய்ப்பு உண்டாயிற்று.

வைகறையில் காலைக்கடன் முடித்து கடற்கரை நோக்கி காட்டுப் பக்கம் சென்று கீரை மூலிகைகளைச் சேகரித்து வந்து கறிசமைக்கக் கொடுப்பது இவரது வழக்கம்.

ஒரு நேர உணவு, பிராணாயாமம் யோகப்பயிற்சி சித்தத்தை சிவன்பால் வைத்தநிலை. இப்படியாக இவர் யோகப் பயிற்சியோடு சிவனிடம் இடையறாத் தியானப் பயிற்சியும் கைகூடப் பெற்றார். இறுதிவரைக்கும் இதே இடத்தில், இதே நிலையில் வாழ்ந்து வந்தார். 08-06-1986 சிவனது திருப்பாதங்களோடு இரண்டறக் கலந்துவிட்டார்.

**இவர் யார்?**

இவரேதான், உரையாசிரியர் அமரர் யோகி - கந்தையா கார்த்திகேசு அவர்கள் - **யோகி கார்த்தியேசு** எங்கு கல்வி

கற்றார்? எவர் இவருக்கு பாடம் சொன்னார்? எவருமல்ல.

எல்லாம்வல்ல சம்புநாதேஸ்வரர் மறைமுகமாகக் கற்பித்தார். கரைதுறை தெரியாத மெஞ்ஞான அறிவு பெற்றார். எம்சமயக் குரவர்கள் செய்த அற்புதங்களில் வைத்து எண்ணத்தகுந்த அளவு, கந்தபுராணம், பெரியபுராணம், சிவராத்தி புராணம் முதலிய புராணங்களுக்கு, மிக நுட்பமாவும், சுவைபடவும், உரை கூறிவந்தார். எழுதித்தந்தார்.

இவரை அறிந்தவர்கள், இவரது அக்கால வாழ்க்கை வரலாற்றினை பிரமச்சாரிய வாழ்வை, மேல்வாரியாகவே பார்த்துக் கொண்டனர். இன்று நாம் ஆரம்பம் தொட்டு இறுதிவரைக்கும் இவரைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது "இறைவனின் திருவிளையாடல்" நன்கு புலனாகும்.

ஈழத்திருநாட்டில் விரல்விட்டு எண்ணத்தகுந்த பேரறிஞர்களுள், மிகச் சிறந்த அறிவுக்களஞ்சியமாகவே யோகி யரை இன்று எண்ண வேண்டியுள்ளது.

அவரது ஆக்கங்களை, நூல் வடிவில் வந்தவற்றை படித்துத் தெரிந்து கொள்வது, சைவசமய மக்களாகிய எம்மவர். ஒவ்வொருவரதும் கடமையாகும்

மனிதன் நூறு ஆண்டுகள் வாழ்வது அபூர்வம் எல்லாம்வல்ல சிவன், என்றும் உள்ளவன் எல்லாம் அறிபவன் எனவேதான், சம்புநாதேஸ்வரம், (எப்பாடுபட்டும்) இரண்டாயிரம் ஆண்டுகளாக நிலைபெற்று நின்று நிலவுகிறது.

"நம்பினார் கெடுவதில்லை இதற்கு யோகி கார்த்திகேசு எடுத்துக்காட்டு"

எதிர்காலம், தமிழ் பேசும் நல்லுலக சைவப் பெருங்குடி மக்கள், எங்கிருந்தாலும் இந்த சிவாலயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும் வாய்ப்புக் கைகூட அருள்பாலித்துள்ளது.

**ஓம் நமசிவாய**

